# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**தலைமைக் கழகம்**

எண்: 21/11, 1வது பிரதான சாலை, கற்பகம் தோட்டம், அடையாறு, சென்னை-600 020.
தொலைப்பேசி : 044 -2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 11.07.2025


## தலைமைக் கழக செய்தி வெளியீடு

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை துணிச்சலுடன் எதிர்த்து போராடி இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு அடித்தளமிட்ட வீரரும், காட்டாலங்குளத்து மாமன்னருமான **அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்த நாள்** இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி **கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன்** அவர்களின் சார்பில், சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள வீரர் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச்சிலைக்கும் மற்றும் அன்னாரின் திருவுருவப்படத்திற்கும் கழக துணை பொதுச்செயலாளரும், தென்சென்னை மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான **திரு.G.செந்தமிழன்**, கழக கொள்கை பரப்பு செயலாளரும், முன்னாள் சமூக நல வாரிய தலைவருமான **செல்வி.C.R.சரஸ்வதி**, கழக அமைப்பு செயலாளரும், கழக பொறியாளர் அணி செயலாளரும், செங்கல்பட்டு வடக்கு மாவட்டக் கழக செயலாளருமான **திரு.ம.கரிகாலன்**, கழக அமைப்பு செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி முன்னாள் மாமன்ற குழுத்தலைவருமான **திரு.V.சுகுமார்பாபு**, கழக மீனவர் அணி செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.T.ஆறுமுகம்,** கழக அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி செயலாளர் **திரு.குட்வில் குமார்,** திருவள்ளூர் மத்தியம் மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.S.வேதாச்சலம்**, மத்திய சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.L.ராஜேந்திரன்**, வடசென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.C.P.ராமஜெயம்**, வடசென்னை மேற்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.பி.ஆனந்தன்**, மத்திய சென்னை மேற்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.ஹாஜி**

தலைமைக் கழகம்
அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**K.முகமது சித்திக்**, வடசென்னை மத்திய மாவட்டக் கழக செயலாளர் **திரு.T.சக்கரபாணி** ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.



சென்னை, எழும்பூர்

இதன் தொடர்ச்சியாக, தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு, கட்டாலங்குளத்தில் **வீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் மணிமண்டபத்தில்** அமைந்துள்ள திருவுருவச்சிலைக்கு, கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.A.சிவபெருமாள்**, தூத்துக்குடி புறநகர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.V.பூலோகப்பாண்டியன்** மற்றும் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு,
கட்டாலங்குளம்

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட/வார்டு, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**